## உயில்கள் பதிவகம் என்பது என்ன?

பொதுச் சொத்துக்காவலரால் பேணிப் பராமரிக்கப்படும் உயில்கள் பதிவகம் என்பது விருப்புறுதியாளர்கள் (உயில் எழுதியுள்ளவர்கள்)

### உயில்கள் பதிவகத்தில் என்ன வகையாக தகவல்கள் சேமித்துவைக்கப்படுகின்றன?

உயில்கள் பதிவகத்தில் நாங்கள் பின்வரும் தகவல்களைச் சேமித்துவைக்கிறோம்.

- உயில் எழுதியுள்ள நபரின் விவரங்கள்.
- உயில் எழுதப்பட்ட தேதி.
- உயிலைத் திரும்பப் பெறும் நபரின் விவரங்கள்.
- உயில் எங்கு வைக்கப்பட்டுள்ளது என்பது குறித்த விவரங்கள்.

நாங்கள் அசல் உயிலின் நகலை எங்களிடம் வைத்துக்கொள்வதில்லை என்பதால், உங்கள் உயிலை நீங்கள் எங்களிடம் சமர்ப்பிக்க வேண்டியதில்லை.

### எனது உயில் தகவல்களை நான் உயில்கள் பதிவகத்தில் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டுமா?

இல்லை, உங்கள் உயில் தகவல்களை நீங்கள் எங்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை.

### உயில்கள் பதிவகம் உயிலைத் தன்வசம் வைத்துக்கொள்கிறதா?

எங்கள் பதிவகத்தில் நாங்கள் உயிலை வைத்துக்கொள்வதில்லை. நீங்களோ அல்லது உங்கள் பிரதிநிதியோ உங்கள் உயிலை வைத்துக்கொள்வீர்கள்.

### உயில் எழுதுவதற்கு உயில்கள் பதிவகம் உதவுகிறதா?

உயில் எழுதுவதற்கு அல்லது எழுத உதவுவதற்கு நாங்கள் சட்ட ஆலோசனை வழங்குவதில்லை. உயில் எழுத உதவுவதற்கு நீங்கள் ஒரு வழக்குரைஞரைத் தொடர்புகொள்ளலாம்.

### எனது உயில் தகவல்களை நான் உயில்கள் பதிவகத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் எனது உயில் செல்லாததாக மாறுமா?

இல்லை, உங்கள் உயில் தகவல்களை நீங்கள் எங்களிடம் சமர்ப்பித்தாலும், சமர்ப்பிக்கவில்லை என்றாலும் உங்கள் உயில் செல்லுபடியாகும்.



## எனது உயில் தகவல்களை நான் எவ்வாறு உயில்கள் பதிவகத்தில் சமர்ப்பிப்பது?

நீங்கள் எங்களின் கணினிவழியான வைப்புப் படிவத்தை https://eservices.mlaw.gov.sg/PTO/welcome.xhtml எனும் இணையத்தளத்தில் அணுக வேண்டியிருக்கும்.

(நீங்கள் எங்களின் கணினிவழியான விண்ணப்பப் படிவத்தை அணுகுவதற்கு, உங்களின் சிங்பாஸைத் தயாராக வைத்திருக்க வேண்டியிருக்கும். உங்களிடம் சிங்பாஸ் இல்லையென்றால், நீங்கள் https://www.singpass.gov.sg எனும் இணையத்தளத்தில் உங்கள் சிங்பாஸுக்காக விண்ணப்பம் செய்யலாம். நீங்கள் சிங்பாஸைப் பெறத் தகுதிபெறவில்லை எனில், நீங்கள் https://pto.mlaw.gov.sg எனும் எங்கள் இணையத்தளம் வாயிலாக ஒரு புகுபதிகை அடையாளம் மற்றும் மறைச்சொல்லுக்காக விண்ணப்பம் செய்யலாம்.)

### ஒரு வழக்கறிஞராக எனது வாடிக்கையாளர் சார்பாக அவரது உயில் தகவல்களை நான் எவ்வாறு பதிவுசெய்வது?

உங்கள் சட்ட நிலையம் அல்லது நிறுவனம் ஒரு நிறுவனக் கணக்கை எங்களிடம் தொடங்குவதற்கு விண்ணப்பம் செய்யலாம். ஒரு நிறுவனக் கணக்கைக் கொண்டு, உங்கள் சட்ட நிலையம் அல்லது நிறுவனத்தால் கணினிவழியான வைப்புப் படிவத்தை நீங்கள் அணுகுவதற்கு அங்கீகாரம் அளிக்க இயலும். இது தொடர்பான விவரங்கள் https://pto.mlaw.gov.sg எனும் எங்கள் இணையத்தளத்தில் கிடைக்கின்றன.

உங்களின் சட்ட நிலையம் அல்லது நிறுவனம் எங்களிடம் ஏற்கெனவே ஒரு நிறுவனக் கணக்கை வைத்திருந்தால், ஒரு புதிய நிறுவனக் கணக்கிற்காக விண்ணப்பிக்க வேண்டிய தேவையில்லை.

MINISTRY OF LAW
SINGAPORE
Public Trustee's Office

# உயில்கள் பதிவகம்

(தகவல் தாள் 4)
24 Feb 2020



## நான் எவ்வாறு இணைய அமைப்பைப் பயன்படுத்துவது?

இணைய அமைப்பை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து https://pto.mlaw.gov.sg எனும் இணையத்தளத்தில் கிடைக்கின்ற எங்களின் படிமுறையிலான வழிகாட்டியை நீங்கள் பயன்படுத்தலாம்.

### உயில் தகவல்களை அணுகுவதற்கான அனுமதி யாருக்கு இருக்கும்?

எங்களிடம் பதிவுசெய்யப்பட்டிருக்கும் எல்லா தகவல்களும் முற்றிலும் இரகசியமானவையாகும். பின்வரும் நபர்களால் மட்டுமே ஒரு உயிலுக்குத் தொடர்புடைய தகவல்களைத் தேட முடியும்.

- உயில் எழுதியுள்ள நபர் (அவர் அடையாளச் சான்றை எங்களுக்கு வழங்கினால்) அல்லது அவரது வழக்குரைஞர்.
- இறந்த நபர் ஒருவரின் சொத்துக்களுக்காகச் செயல்படுகின்ற வழக்குரைஞர் (அவர் மரணச் சான்றிதழைச் சமர்ப்பித்தால்).
- இறந்த நபர் ஒருவரின் இரத்த சம்மந்தமுள்ள உறவினர் - இறந்த நபரின் மரணச் சான்றிதழ் மற்றும் இறந்த நபருடனான அவரது உறவுமுறையைக் காண்பிக்கின்ற ஆவணங்களை அவர் சமர்ப்பித்தால்.
- நீண்டகால அதிகாரப் பத்திரத்தின் (LPA) டோனீ அல்லது நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டுள்ள அல்லது நியமிக்கப்படும் பிரதிநிதி (அவர் LPA அல்லது நீதிமன்ற ஆணை/விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தால்)
- உயில் எழுதியுள்ளவரின் உயில் அல்லது சொத்துக்களில் சட்டப்படியான உரிமையைக் கொண்டிருப்பதாகப் பொதுச் சொத்துக்காவலருக்குத் தோன்றும் நபர்.

### எனது உயில் தகவல்கள் எவ்வளவு காலத்திற்கு உயில்கள் பதிவகத்தில் சேமித்துவைக்கப்படும்?

உயில் எழுதியுள்ள நபரின் இறந்த தேதியில் இருந்து 120 ஆண்டுகளுக்கு உயில் தகவல்கள் எங்கள் அமைப்பில் சேமித்துவைக்கப்படும்.



## உயில்கள் பதிவகத்தில் நான் எவ்வாறு உயில் தகவல்களைத் தேடுவது?

நீங்கள் எங்களின் கணினிவழியான தேடல் படிவத்தை https://eservices.mlaw.gov.sg/PTO/welcome.xhtml எனும் இணையத்தளத்தில் அணுக வேண்டியிருக்கும்.

எங்களுக்குப் பின்வரும் சான்றாவணங்கள் தேவைப்படும்.

உங்களின் சொந்த உயிலைத் தேடும் போது, பின்வரும் விவரங்களைப் பதிவுசெய்யவும்:

- உங்களின் அடையாள அட்டை

சட்ட நிறுவனங்களுக்கு:

- உயில் எழுதியுள்ள நபரின் அடையாள அட்டை, அல்லது
- உயில் எழுதியுள்ள நபரின் மரணச் சான்றிதழ்

இரத்த சம்மந்தமுள்ள உறவினருக்கு:

- உயில் எழுதியுள்ள நபரின் மரணச் சான்றிதழ்
- இரத்த சம்மந்தமுள்ள உறவினரின் அடையாள அட்டை
- உயில் எழுதியுள்ள நபருடனான உறவுமுறையின் சான்று (உதாரணமாக, பிறப்புச் சான்றிதழ் அல்லது திருமணச் சான்றிதழ்)

நீங்கள் இந்த ஆவணங்களை ஸ்கேன் செய்து, அவற்றை உங்களின் கணினிவழியான விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டியிருக்கும். நீங்கள் எங்களின் கணினிவழியான விண்ணப்பப் படிவத்தை அணுகுவதற்கு, உங்களின் சிங்பாஸையும் தயாராக வைத்திருக்க வேண்டியிருக்கும். உங்களிடம் சிங்பாஸ் இல்லையென்றால், நீங்கள் https://www.singpass.gov.sg எனும் இணையத்தளத்தில் உங்கள் சிங்பாஸுக்காக விண்ணப்பம் செய்யலாம். நீங்கள் சிங்பாஸைப் பெறத் தகுதிபெறவில்லை எனில், நீங்கள் https://pto.mlaw.gov.sg எனும் எங்கள் இணையத்தளம் வாயிலாக ஒரு புகுபதிகை அடையாளம் மற்றும் மறைச்சொல்லுக்காக விண்ணப்பம் செய்யலாம்.

### உயில் தகவல்களைப் பதிவுசெய்வதற்கு அல்லது தேடுவதற்கு நீங்கள் விதிக்கும் கட்டணங்கள் என்ன?

எங்களின் கட்டணங்கள் (ஜிஎஸ்டி உள்பட) குறித்த விவரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளது.

| உருப்படி | கட்டணங்கள் |
|---|---|
| பதிவுசெய்யப்படும் தகவல்கள் | $50.00 |
| தேடல் விண்ணப்பத்தின் கட்டணம் | $10.00 |

உயில் தகவல்களைப் பதிவுசெய்வதற்கு அல்லது தேடுவதற்கான கட்டணத்தை, பற்று அட்டை (டெபிட் கார்டு), கடன் அட்டை (கிரெடிட் கார்டு) அல்லது நேரடிப் பற்று (டைரக் டெபிட்) வாயிலாகக் கணினிவழியே செலுத்த வேண்டும்.


***இணையதளம்:***
https://pto.mlaw.gov.sg

***தொலைபேசி:***
தொலைபேசி: 1800-2255-529
தொலைப்பிரதி: (65) 6224-2858

***முகவரி:***
The URA Centre (East Wing)
45 Maxwell Road #07-11
Singapore 069118

***மின்-உதவியாளர் (இ-ஹெல்பர்) இயங்கும் நேரங்கள்:***
திங்கள் முதல் வெள்ளி வரை: காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை


MINISTRY OF LAW SINGAPORE | Public Trustee's Office